வேண்டி உள்ளது. அந்த வட்டாரத்தின் பரப்பளவைக் கருதி யாவது, இந்த ஆண்டிலேயே ஒரு சப்-ரிஜிஸ்திரார் அலுவலகம், கும்மிடிப்பூண்டியில் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கும்மிடிப்பூண்டிக்கும், பொன்னேரிக்கும் இடையே 7 மைல் தொலைவுதான் இருக்கிறது. என்றாலும், துணைப்பதிவு அலுவலகம் அமைக்க வேண்டுமானால் அதற்கு வேண்டிய நிதி வசதியில் தனித்து அது இயங்கக்கூடிய நிலையில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவற்றைப் பரிசிலனை செய்து உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி செய்யலாம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, கும்மிடிப்பூண்டிக்கும் பொன்னேரிக்கும் இடையே சுருக்கு வழியாகப் போனால் 10 மைல் இருக்கலாம். கும்மிடிப்பூண்டிக்கு வடமேற்கே 15—20 மைல் தூரம் இருக்கிற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பொன்னேரிக்கு வர வேண்டுமானால், 25-30 மைல் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு அங்கே ஒரு தனி துணைப்பதிவு அலுவலகம் திறப் பதற்கு வேண்டிய முயற்சியை அமைச்சரவர்கள் மேற்கொள்வார் களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : எவ்வளவு தொலைவு இருக்கிறது என்பது மட்டுமல்ல. இந்தப் பிரச்னைக்கு நான் முன்பு கூறியது போல், தனித்து இயங்குகிற அளவுக்கு அத னுடைய நிதி வசதி இருக்க வேண்டும். அந்த முறையில் பரிசீலனை செய்யப்படும்.

தொழிலாளர் வேலை நேரம்

* 359 வினா—திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) தொழிலாளர்களின் வேலை நேரங்களை (வாரத்தில்) குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) வாரத்துக்கு 48 மணி நேர வேலை என்கிற தற்போதைய அளவை வாரத்துக்கு 45 மணி நேரமாகக் குறைக்கும் கருத்து பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது வேலை நேரத்தைக் குறைப்பதற்காக அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது அமுலுக்கு வரும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அது பற்றி தேசிய தொழிலாளர் நல ஆணைக்குழு பரிசீலனை செய்து வருகிறது. ஆனால் ஒரே சமயத்தில் 40 மணியாகக் குறைப்பதற்கு சாத்தியமில்லை. முதலில் 45 மணி என்றும், பின்னர் 40 மணி என்றும் குறைக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதுவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்த முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இன்றைக்குப் பல நாடுகளில் தொழிலாளிகள் 6 நாள் வேலை செய்வது என்பதற்குப் பதிலாக 5 நாள் வேலை செய்து, 40 மணி நேரமும், அதற்குக் குறைவாகவும் வேலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருப்பது போல், இந்த 45 மணிநேரம் வேலை குறைப்பு என்று சொல்லப்படுகிறது, அது மாதிரி வேலை நாட்களும் குறைக்கும் குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அதை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது, கனம் உறுப்பினரவர்களின் யோசனை நினைவில் கொள்ளப்படும்.

Sudanthiram Transport in Madurai

* 383 *Q.*—THIRU K. T. K. THANGAMANI,
THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the workers of Sudanthiram Transport, Madurai have been on strike for more than two months; and

(*b*) the steps taken to bring it to a successful conclusion?